தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 11, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023

1992, மார்ச் 24, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் ''

யார் ஒருவருக்கும் கேடு விளைவிக்காமல் நல்ல வழியில் ஈட்டிய செல்வமானது ஒருவருக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 319 திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை.

வினா எண். 280, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

280—

இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பயனை அடையமுடியாமல் போன விவசாயிகள்.

*2454—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் இனாம், கோடாரங்குளம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமல் சுமார் 450 பயிரிடும் விவசாயிகள் கடந்த 20 ஆண்டுக் காலமாக சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். இனாம் கோடாரங்குளம் கிராமம், இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, நிலவரித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சாகுபடியாளர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டது. இது குறித்த வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் உள்ளது. உறுப்பினர் கேட்கும் விவரங்களை இம்மன்றத்தில் தெரிவித்தால், அது நிலுவையில் உள்ள வழக்கின் தன்மையை பாதிக்கக்கூடும். எனவே, இதுபற்றிய முழு விவரங்களைத் தெரிவிக்க இயல வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடாரங்குளம் கிராமத்தில் சட்டப்படி 20 ஆண்டுகளுக்கு முன்னால் அப்போதிருந்த அரசு பட்டா வழங்கியது. ஆனால் அந்த விவசாயிகள் அந்தப் பலனை அடைய முடியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் கோர்ட்டுக்குச் சென்றதால் ஏழை விவசாயிகள் கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அறுவடை நேரத் திலும் அந்தப் பகுதியிலே ஒரு பதட்ட நிலை நீடித்துக்கொண் டிருக்கிறது. காவல் நிலையத்தின் உதவியுடன் அமைதிபடுத்தப் பட்டு வருகிறது. இதனால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பட்டாவைக் கொடுத்து, பலனையும் விவசாயிகள் அடையும் வகையில் அதற்கு வேண்டிய நடவடிக்கையை நமது அரசு எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உச்ச நீதிமன்றத்தில் இருப்பதனால் அதைப்பற்றிய முழு விவரமும் சொல்ல இயலாது. ஆனால் வழக்கு 1989-லே தான் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது. மிக விரைவிலே இதை முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும், பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில் பயிரிடுதாரர்களுக்கு வேண்டிய நியாயமான உதவிகளை அரசு செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடாரங்குளம் கிராமம், அதுபோன்று என்னுடைய தொகுதியிலுள்ள சிவந்திபுரம் கிராம விவ சாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இடையில் வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த வழக்கு ஹைக்கோர்ட்டில் நடக்கும்போது, சரியான முறையிலே வழக்கறிஞர்களை வைத்து

1992 மார்ச் 24]

வாதாடாமல் இருந்ததனால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் விரோதமான முறையிலே தீர்ப்பளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திலே உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தபோது கூட குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அந்த அரசாங்கம் அப்பீல் செய்யாமல் இருந்துவிட்டது. அதன்பிறகு திரும்பவும் நமது அரசு கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருப்பதாகத் தெரிகிறது. சென்னை ஹைக்கோர்ட்டில் வந்த அந்தத் தீர்ப்பின்மீது தடையுத்தரவு வாங்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகிறது. அந்தத் தடையுத்தரவைப் பெறுவதற்கு பல மாதங்கள் ஆகிக்கொண்டிருக்கின்றன. இதனால் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். நமது அரசு ஏழையெளிய விவசாயிகள் மீது அக்கறை கொண்ட அரசு. டாக்டர் இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் ஒரு சிறந்த வழக்கறிஞரை அல்லது தலைமை வழக்கறிஞரை வைத்து இந்த வழக்கை வேகமாக நடத்தி, அதன்மூலம் விவசாயிகளுக்கு பட்டாக் கொடுத்து அவர்கள் பலன் அடையும் வகையில் தேவையான நடவடிக்கையைத் துரிதமாக அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளில் ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 281, திரு. எம்.கே. பாலன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

281— சைதாப்பேட்டை பனகல் கட்டிடம்.

*3925—திரு. எம்.கே. பாலன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை சைதாப்பேட்டை பனகல் கட்டிடம் இடிக்கப்பட்ட இடத்தில் புதிய கட்டிடம் எப்போது கட்டப்படும்;

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்படும்?

(இ) அந்தக் கட்டிடத்தில் எந்தெந்த அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): கட்டிடங்கள் கட்டி முடியும் தறுவாயில் உள்ளன. 31-12-1992-க்குள் முடிந்துவிடும். ரூ 6 கோடி மதிப்பிடப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.